**செய்தி வெளியீடு எண் : 880** **நாள் : 10.05.2023**

# மாண்புமிகு ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை அமைச்சர் திருமதி என்.கயல்விழி செல்வராஜ் அவர்கள் தலைமையில் இன்று (10.05.2023) தலைமைச் செயலகத்தில் வன்கொடுமைகள் வழக்குகள் தொடர்பான ஆய்வுக் கூட்டம் நடைபெற்றது.

ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் (வன்கொடுமைத் தடுப்பு) சட்டம் 1989, ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் (வன்கொடுமைத் தடுப்பு) விதிகள் 1995 மற்றும் திருத்த விதிகள் 2016, விதி 16 மற்றும் திருத்த விதிகள் 2018–இன்படி, மாண்புமிகு ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை அமைச்சர் திருமதி என்.கயல்விழி செல்வராஜ் அவர்கள் தலைமையில் காவல்துறை தலைவர், சமூக நீதி (ம) மனித உரிமைகள் மற்றும் ஆதிதிராவிடர் நல இயக்குநர் ஆகியோருடன் இன்று **(10.05.2023)** வன்கொடுமை வழக்குகள் மற்றும் தீருதவிகள் தொடர்பான பொருண்மை குறித்து ஆய்வுக் கூட்டம் பழைய கூட்ட அரங்கம், இரண்டாவது தளத்தில் நடைபெற்றது.

கூட்டத்தில், வன்கொடுமைக்கு ஆளானவர்களுக்கு அளிக்கப்பட்ட தீருதவி, மறுவாழ்வு மற்றும் அவை பற்றிய விவரங்கள், இந்தச் சட்டத்தின்கீழ் வழக்குகள் தொடுத்தல், சட்டத்தை செயற்படுத்தும் பல்வேறு அலுவலர்களின் / அமைப்புகளின் பங்கு, பணி மற்றும் மாநில அரசால் பெறப்படும் பல்வேறு அறிக்கைகள் மற்றும் ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் (வன்கொடுமைத் தடுப்பு) திருத்தச் சட்டம் 2015–இன்படி வன்கொடுமையால் பாதிக்கப்பட்டவர்களின் உரிமைகள், மாவட்ட அளவில் விழிப்புணர்வு கூட்டங்களை நடத்துதல், மாவட்ட விழிப்புணர்வு மற்றும் கண்காணிப்புக் குழு கூட்டம் நடத்துதல், பழங்குடியினர் சாதிச்சான்றிதழ் மெய்தன்மை குறித்து நிலுவையில் உள்ள வழக்குகளை விரைவில் முடித்தல் ஆகியவை குறித்து இந்த கூட்டத்தில் மாண்புமிகு ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை அமைச்சர் அவர்களின் தலைமையில் ஆய்வு செய்யப்பட்டது.

இக்கூட்டத்தில், ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை செயலாளர் திருமதி க.லட்சுமி பிரியா, இ.ஆ.ப., ஆதிதிராவிடர் நலத்துறை இயக்குநர் திரு.த.ஆனந்த், இ.ஆ.ப., சமூக நீதி மற்றும் மனித உரிமைகள், காவல்துறை தலைவர் திரு.எஸ்.பிரபாகரன், இ.கா.ப. மற்றும் துறை சார்ந்த அலுவலர்கள் கலந்துகொண்டனர்.

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**

அரசின் செய்திகளை உடனுக்குடன் தெரிந்துகொள்ள :

tndiprnews tndipr tndipr TN DIPR www.dipr.tn.gov.in